

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (13.11.2024) சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் நோயாளியின் உறவினர் ஒருவரால் தாக்கப்பட்டதால், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மருத்துவர் பாலாஜி அவர்களை நேரில் பார்வையிட்டு, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன், முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து குடும்பத்தினரிடமும் மருத்துவர்களிடமும் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி மற்றும் மருத்துவர்கள் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2024 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டும் பணிக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி நேற்று (14.11.2024) காரை கூட்ரோடு, ஆயுதப்படை காவல் வளாகம் அருகில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டும் பணியினை தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன். நகரமன்ற தலைவர் திருமதி. சுஜாதா வினோத், துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், வருவாய் கோட்டாட்சியர் இராஜராஜன், நகர செயலாளர் பூங்காவனம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பிரேம் ஆனந்த் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

# மருத்துவர்கள் சங்கம் அறிவித்த வேலை நிறுத்தம் முடிவுற்று சுமூகத் தீர்வு காணப்பட்டது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, நவ. 15 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று முன்தினம் (13.11.2024) தமிழ்நாடு அனைத்து மருத்துவர் மற்றும் செவிலியர் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு சுமூக தீர்வு எட்டப்பட்டது.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவனையில் ஒரு அசம்பாவிதம் நடைபெற்றது. பெருங்களத்தூரை சேர்ந்த விக்னேஷ் என்ற இளைஞர் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் புற்றுநோயியல் துறை மருத்துவர் பாலாஜி என்பவரை தாக்கி, அவர் மறைத்து கொண்டு வந்த சிறு கத்தியின் மூலம் 7 இடங்களில் பலத்த காயத்தை ஏற்படுத்தியிருந்தார். அவரை உடனடியாக பணியாற்றிய ஊழியர்கள் பிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்தார்கள். காவல்துறையினர் அவரை அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலுக்குள்ளான மருத்துவர் பாலாஜி அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அந்த மருத்துவர் தற்போது நலமுடன் உள்ளார், சிறிது நேரத்திற்கு முன்னர் காணொளி காட்சி மூலம் என்னிடம் உரையாற்றினார். இந்த சந்திப்பு முடிந்தவுடன் அவரை பார்க்க செல்ல உள்ளேன். இந்த மருத்துவர் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் பணியாற்றி சிறப்பான சேவையினை பொதுமக்களுக்கு வழங்கியுள்ளார். விக்னேஷ் என்பவரின் தாயார் காஞ்சனா என்பவர் கடந்த 6 மாதங்களாக அந்த மருத்துவமனையில் முற்றிய நிலையிலான புற்றுநோய் பாதிப்பிற்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார். அவருக்கு ஏற்கனவே 6 முறைக்கு மேல் கீமோ தெரபி சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் விக்னேஷ் தனது தாய்க்கு சரியான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று மருத்துவரிடம் வாக்குவாதம் செய்து தகராறு செய்துள்ளார். இந்த போக்கு மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. அரசு மருத்துவர்கள் மிகச் சிறந்த வகையில் ஆத்மார்த்தமாக சேவை மனப்பான்மையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கொரோனா பேரிடர் காலங்களில் சிறப்பாக பணியாற்றி பொதுமக்களின் நம்பிக்கையினை பெற்ற மருத்துவர்களாக அரசு மருத்துவர்கள் உள்ளனர்.

எந்த மருத்துவர்கள் வேண்டும் என்றே சிகிச்சை அளிப்பதில் தவறு இழைக்கமாட்டார்கள். காவல்துறையினர் உடனடியாக அவரை கைது செய்து அவர்மட்டும்தான் வந்தாரா, இல்லை அவருடன் வேறு யாரேனும் வந்தார்களா என்று விசாரணை நடத்தி வருகின்றனர். வேறு யாரேனும் சம்பத்தப்பட்டிருந்தால் அவர்களின் மீதும் அதிகபட்சமான நடவடிக்கையினை எடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் மருத்துவர் பாலாஜி அவர்களை நேரடியாக சந்தித்து அவருடைய தாய், மனைவி மற்றும் மகள் ஆகியோருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இந்த சம்பவம் நடைபெற்ற பின்பு ஒரு சில மருத்துவர் சங்கங்கள் சார்பில் வேலை புறக்கணிப்பு மற்றும் போராட்டங்களை அறிவித்திருந்தார்கள். உடனடியாக நானும் துறையின் செயலாளர், காவல் துறை உயரலுவர்களுடன் சம்மந்தப்பட்ட சங்க நிர்வாகிகளை அழைத்து மாலை 4 மணிமுதல் சுமார் 2 மணிநேரம் வரை அவர்களுடன் பேசி, அவர்களும் இன்னமும் மருத்துவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு மற்றும் பல்வேறு விஷயங்களை சொல்லியிருக்கிறார்கள்,

ஏற்கெனவே தமிழ்நாடு அரசு அவர்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் பல்வேறு விஷயங்களை செய்து வருகிறது. அவர்கள் தமிழ்நாடு அரசிடம் கேட்டது மருத்துவமனைகளில் கூடுதல் பாதுகாப்பு வழங்க கோருவது, குறிப்பாக கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப இம்மருத்துவமனையில் Out post தற்போது தொடங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நமது காவல் துறை தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில் வேறு எந்த மருத்துவமனையிலாவது out post தேவைப்படுமானால் அமைத்து தருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதல்முறையாக சிசிடிவி கேமராக்களை பொறுத்தும் பணியினை கடந்த 3 மாதங்களாக செய்து வருகிறோம். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சிசிடிவி கேமராக்கள் பொறுத்தப்பட்டு விட்டது. அதற்கு சர்வர் மட்டுமே பொறுத்தப்பட வேண்டும், அந்தப்பணிகளும் மிக விரைவில் முடிக்கப்பட்டு சிசிடிவி கேமராக்கள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயல்பட உள்ளது. ஏற்கெனவே மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், வட்டார அரசு மருத்துவமனைகளிலும், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் சிசிடிவி கேமரா என்பது இருக்கின்றது.

மருத்துவ சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் கூடுதலாக சொன்னது, நோயாளிகளுடன் வரும் உதவியாளர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் அல்லது வரன்முறைப்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுடன் உடனிருப்பவர்களுக்கு (Attenders) அடையாள அட்டை வழங்கும் முறையினை நான் ஏற்கெனவே தொடங்கி வைத்திருந்தேன்.

அதேபோல் அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் நோயாளிகளுடன் உடனிருப்பவர்களுக்கு (Attenders) அடையாள அட்டை வழங்கப்படும் முறை தொடங்கப்பட விருக்கிறது. மருத்துவர் சங்கங்கங்களின் நிர்வாகிகள் கேட்டது மருத்துவமனைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துதான், அவர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர், மருத்துவர்கள் வேலை நிறுத்த அறிவிப்பு சுமுகமாக முடிவு பெற்றுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) எஸ்.டேவிட்சன் தேவாசிர்வாதம், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், கூடுதல் ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு, தெற்கு) டாக்டர்.கண்ணன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, தமிழ்நாடு மருத்துவ அலுவலர் சங்கம் மரு.அகிலன், மரு.மகாலிங்கம், அரசு அனைத்து மருத்துவர்கள் சங்கம் மரு.சுந்தரேசன், ஜனநாயக அரசு மருத்துவர்கள் சங்கம் மரு.பாலகிருஷ்ணன், மரு.ஆண்டோ, பட்டமேற்படிப்பு மற்றும் அரசு மருத்துவர்கள் சங்கம் மரு.இராமலிங்கம், மரு.ரமா, தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கம் மரு.சந்திரசேகர், மரு.ஆலன், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மரு.இரவிந்திரநாத், மரு.சாந்தி, செவிலியர் சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயரலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் தருமபுரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டி.எல்.காவேரி ஏற்பாட்டில் ஏ.கொல்லஹள்ளி, கடகத்தூர்,அதகபாடி உள்ளிட்ட ஊராட்சிகளில் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, தலைமையில்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,தர்மபுரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் டாக்டர்.ஆ.கா.தருண் முன்னிலையில் BLA2 ,BLC மற்றும் கிளை கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி,ரேணுகாதேவி, அணிகளின் அமைப்பாளர்கள் முத்துலட்சுமி, தடங்கம். இளையசங்கர், எம்.பி.கௌதம்,துணை அமைப்பாளர்கள் உதயசூரியன்,கௌதம்,சுகுமார்,வினோத்குமார், நவீன்,கிளைக் கழக நிர்வாகிகள், கே.எஸ்.ஆர்.அன்பழகன்,ரவி,BLA2, BLC நிர்வாகிகள்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## கடலூர் மாவட்டத்திலுள்ள நூலகங்களுக்கு

# ரூ. 1 லட்சம் மதிப்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்!

## கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கடலூர், நவ. 15-

கடலூர் மாவட்ட நூலகங்களுக்கு ரூ. 1 லட்சம் மதிப்பிலான புத்தகங்களை கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் வழங்கினார்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள நூலகங்களுக்குப் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி கடலூர் மாவட்ட மைய நூலகத்தில் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட நூலக அலுவலர் சக்திவேல் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் கலந்து கொண்டு ரூ.1 லட்சம் மதிப்பில் ‘தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்’ புத்தகத்தை மாவட்ட மைய நூலகத்திற்கு வழங்கினார்.

தொடர்ந்து அவர், அந்தப் புத்தகங்களை மாவட்டத்தில் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் வழங்குமாறு அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மைய நூலகர்கள் ஆறுமுகம், கல்பனா, பர்குணன், இந்திரா காந்தி, சண்முகசுந்தரம், வாசகர் வட்ட தலைவர் பாஸ்கரன், எழுத்தாளர்கள் பால்கி, ராஜா உள்படபலர் கலந்து கொண்டனர்.



உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த வாலாந்தூரில் மதுரையில் இருந்து தேனி மற்றும் கம்பம் செல்லும் அரசு பேருந்துகள் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்வது இல்லை, 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் வாலாந்தூரைச் சுற்றி உள்ளது, இந்த கிராம மக்கள் தேனி மற்றும் கம்பம் செல்ல வேண்டுமென்றால் உசிலம்பட்டி சென்று தான் பேருந்து ஏற வேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது, இதனால் இந்த கிராம மக்கள் மிகுந்த அவதிக்கு உள்ளாகிறார்கள். ஆகவே மதுரையிலிருந்து தேனி மற்றும் கம்பம் செல்லும் பேருந்துகள் வாலாந்தூர் பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி செல்ல வலியுறுத்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், மதுரை கோட்டம் 1 துணை மேலாளர் சதீஸ்குமாரை கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் சந்தித்து மனு அளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வெங்கிடங்கால் சந்தானம்**

**நவம்பர் 15 (2005)**



நாகை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

1967ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது தலைவர் கலைஞர்மீது மாற்றுக் கட்சியினர் தாக்குதல் நடத்தியபோது கலைஞரை உடனிருந்து பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் 18-11-2024 திங்கட்கிழமை, மாலை 3.00 மணி அளவில் ஈரோடு மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயத்தில்” கழக விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும் வீட்டு வசதித் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி மற்றும் விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா.தமிழ்மணி, எஸ்.கே.வேதரத்தினம் விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ். அப்துல்காதர், நாகை ஆர்.அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா.செந்தமிழ்செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் விவசாய அணி துணைச் செயலாளர்கள் முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், டி.எம். அரியப்பன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என். மணி, இராமநாதபுரம் என்.நல்லசேதுபதி, திருப்பத்தூர் கே.புருஷோத்தமன், கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிரமணியன், பா.குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: நவம்பர் 27 -தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள், அணியின் வளர்ச்சி ஆக்கப் பணிகள் -குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 13.11.2024

**ஏ.கே.எஸ்.விஜயன்,**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புதுக்கோட்டை டி. சுந்தரம்**

**நவம்பர் 15 (2012)**



புதுக்கோட்டை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 25 ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகத் துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராக தொடர்ந்து 25 ஆண்டுகளாக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுக்கோட்டை அர்பன் கூட்டுறவுப் பண்டகச் சாலையில் தொடர்ந்து இயக்குநராகவும் – ஒருமுறை துணைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“உழைப்பும், தியாகமும், நேர்மையும் இருந்தால் மட்டுமே உள்ளூரில் தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினராக வரமுடியும் என்பதை நிருபித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**